**SC NO.51/2012 Date:27.01.2025**

கூடுதல் மாவட்ட **6** நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **)**, காஞ்சிபுரம் **(**பக்கம் **)**

சாட்சியாகிய திரு.முருகன் என்ற **Pw8** நபரின் வாக்குமூலம் **(1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachaiyappan,** இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் - திரு. முருகன்

த/பெ, - திரு. ஆறுமுகம்

வயது **- 58**

தொழில் - புகைப்பட கலைஞர்

முதல் விசாரணை:

நான் தற்போது சின்ன காஞ்சிபுரம் விஜயகிராமணி தெரு என்ற முகவரியில் வசித்து வருகிறேன் நான் சிவாநந்தா புகைப்படம் கடை நடத்தி வருகிறேன். கடந்த **2011**ம் ஆண்டில் ஜீலை மாத்தில் ஒரு நாள். சின்ன காஞ்சிபுரம் காவல்நிலைய ஆய்வாளா் யதோத்தக்காரி பெருமாள் கோவில் அருகே உள்ள சம்பவ இடத்தை புகைப்படம் எடுக்க வேண்டும் என்று என்னை அழைத்ததின் பேரில் காலை **9.30** மணியளவில் அங்கு சென்று சம்பவ இடத்தில் ரத்த கறை படிந்த இடத்தை **3** அல்லது **4** கோணங்களில் புகைப்படம் எடுத்தேன். பின்பு அந்த இடத்திலிருந்த காய்கறி வண்டியை ஒரு கோணத்தில் எடுத்தேன். அதன் பின்பு பகல் **12.30** அல்லது **1** மணிக்கு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் உள்ள பிணவறைக்கு சென்று அங்கு இருந்த ஒரு இறந்த நபரின் உடலை இரண்டு கோணங்களில் புகைப்படம் எடுத்தேன். அந்த புகைப்படங்களை அச்சு எடுத்து புகைப்படங்களாக மாற்றியும் குறுந்தகுடாகவும் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். என் முன் காட்டப்படும் புகைப்படங்கள்தான் நான் எடுத்தவை

ஆகும் அவை அ.சா.ஆ.**13** வரிசை **(10** எண்ணம்**).** நான் காவல் ஆய்வாளருக்கு கொடுத்த குறுந்தகடு அ.சா.ஆ.**14** போலிசார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

காவல்நிலையத்திலிருந்து என்னை எந்த காவலர் அழைத்தார் என்று தெரியாது அவர் என்ன பதவியலிருந்தார் என்று தெரியாது. நான் சம்பவ இடத்தையும் பிணவறையில் உள்ள நபரையும் புகைப்படம் எடுத்த போது யார் இருந்தார்கள் என்றால் ஒரு காவலர் இருந்தார். சம்பவ இடத்தையும் உடலையும் இந்த கோணத்தில்தான் எடுக்க வேண்டும் என்று யார் எனக்கு அறிவுறுத்தினார்கள் என்றால் அனுபவத்தின் அடிப்படையில் நானே எடுத்தேன். நான் அரசு அங்கீகாரம் பெற்ற புகைப்பட கலைஞர் இல்லை. நான் எடுத்த புகைப்படம் மற்றும் குறுந்தகட்டில் ரசீது கொடுத்து அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. **(** மறுவிசாரணை இல்லை **)**